# யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி

# நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் 2007

**04.07.2007** (புதன்கிழமை) காலை **9.00** மணி

தலைவர்
திரு.ச. சிவநேஸ்வரன் அவர்கள்
(அதிபர்)

நிறுவுநர் பேருரை
திரு.இ. வசந்தசேனன் அவர்கள்
(சட்டத்தரணியும் பதில் நீதவானும்)

விசேட அதிதி
திருமதி. றெஜினா இருதயநாதன் அவர்கள்
(ஓய்வுபெற்ற வலயக் கல்விப்பணிப்பாளர்)

பிரதம விருந்தினர்
திரு.ப. விக்னேஸ்வரன் அவர்கள்
(வலயக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம்)

சிறப்பு விருந்தினர்
திரு.க. தனபாலசிங்கம் அவர்கள்
(ஓய்வு பெற்ற கோட்டக் கல்விப்பணிப்பாளர்)

பரிசில் வழங்கல்
திருமதி.தவமணி விக்னேஸ்வரன்

நன்றியுரை
திரு.க. விவேகானந்தராஜா
(செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்)

# நிகழ்ச்சி நிரல்

✻ மங்கள விளக்கேற்றல்

✻ இறைவணக்கம்

✻ வரவேற்புரை :-
திரு.க. ஜெகநாதன் அவர்கள் (பிரதி அதிபர்)

✻ நிறுவுனர் பேருரை :
திரு.இ. வசந்தசேனன் அவர்கள்
(சட்டத்தரணியும் பதில் நீதவானும்)

✻ அதிபர் அறிக்கை

✻ பரிசில் வழங்கல் :
திருமதி. தவமணி விக்னேஸ்வரன் அவர்கள்

✻ விசேடஅதிதி உரை :
திருமதி.றெஜினா இருதயநாதன் அவர்கள்
(ஓய்வு பெற்ற வலயக்கல்விப் பணிப்பாளர்)

✻ பிரதம விருந்தினர் உரை :
திரு.ப.விக்னேஸ்வரன் அவர்கள்
(வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம்)

✻ சிறப்பு விருந்தினர் உரை :
திரு.க.தனபாலசிங்கம் அவர்கள்
(ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்)

✻ நன்றியுரை : திரு.க. விவேகானந்தராஜா
(செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்)

✻ கலை நிகழ்வுகள்

✻ கல்லூரிக் கீதம்

# அதிபர் அறிக்கை

மதிப்பிற்குரிய பிரதம விருந்தினர்
வலயக்கல்விப் பணிப்பாளர் உயர் திரு.ப.விக்னேஸ்வரன் அவர்களே!

பரிசில் வழங்கி சிறப்பிக்க வந்திருக்கும்
திருமதி. தவமணி விக்னேஸ்வரன் அவர்களே!

விசேட அதிதியாக வருகைதந்துள்ள
இளைப்பாறிய முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர்
திருமதி றெஜினா இருதயநாதன் அவர்களே!

சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும்
இளைப்பாறிய கோட்டக்கல்விப்பணிப்பாளர்
திரு.க.தனபாலசிங்கம் அவர்களே!

நிறுவுனர் நினைவுப் பேருரையை நிகழ்த்த வந்திருக்கும்
பதில் நீதிபதி திரு. வசந்தசேனன் அவர்களே!

நன்றியுரை கூற வருகை தந்துள்ள பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர்
திரு.க. விவேகானந்தராஜா அவர்களே!

இங்கே வருகை தந்துள்ள பாடசாலை அதிபர்களே, பெற்றோர்களே,
பழையமாணவர்களே, நலன்விரும்பிகளே, எமது ஆசிரியர்களே,
மாணவச் செல்வங்களே அனைவருக்கும் எனது அன்பு வணக்கங்கள்.

எமது வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ப.விக்னேஸ்வரன் அவர்களின் உயிர்ப்பான உயர்வான கல்விப்பணியை அறியாதவர்கள் இல்லை எனலாம். பட்டதாரி ஆசிரியராக, அதிபராக, கொத்தணி அதிபராக, கோட்டக் கல்விப் பணிப்பாளராக, வலயக் கல்விப் பணிப்பாளராக அவரின் உயர்வுகள் கல்வி மீது அவர்காட்டும் அக்கறைக்கும் உழைப்பிற்கும் சான்றாக அமைகின்றது எனலாம். அவர் பணியாற்றிய இடங்களிலெல்லாம் கல்விச் செயற்பாடுகள் உயிர்ப்புடனும் உத்வேகத்துடனும் விளங்கியதை நாம் அறிவோம்.

எமது வலயக் கல்விப் பணிப்பாளரின் கீழ் ஆசிரியராகவும், அவர் கொத்தணி அதிபராக இருந்த காலத்தில் அதிபராகவும் வலயக் கல்விப்பணிப்பாளராகவும் இருக்கும்காலத்தில் அதிபராகவும் கடமையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமையும் என்பணி சிறக்க வாய்ப்பாக அமைந்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். எதையும் துல்லியமாக மதிப்பிட்டு ஆர்பாட்டம் இல்லாமல் அமைதியாகவும் விரைவாகவும் செயற்படுத்தும் பாங்கு அவரின் கல்விப்பணியின் சிறப்பிற்குக் காரணமாய் அமைந்துள்ளது. ஐயா!

இன்று வலிகாமக் கல்வி வலயக் கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பெரு வெற்றிகளை ஈட்டி வருவதற்கு தங்களின் வழிப்படுத்தல்களும் வழிகாட்டல்களும் காரணமாய் அமைந்துள்ளது. இத்தகைய பெருமை மிக்க தாங்கள் பிரதம விருந்தினராக வருகை தந்தமையிட்டு நாங்கள் பெருமை கொள்கிறோம். தங்களையும் தங்கள் துணைவியாரையும் அன்புடன் வரவேற்று சிறப்புகள் பல பெற்று பல்லாண்டு காலம் இனிதே வாழ வாழ்த்துகிறோம்.

**விசேட விருந்தினராக வருகை தந்திருக்கும்**
**திருமதி றெ. இருதயநாதன் அவர்களே!**

இன்று எமது பரிசளிப்புவிழா இரு ஆண்டுகளின் பின வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. எமது வலயக் கல்விப்பணிப்பாளராகப் பெருமையுடன் விளங்கிய தாங்கள் இப்பாடசாலை உயர்விற்கு ஆற்றிய பணியை நாம் மறவோம். தாங்கள் பணியாற்றிய காலத்தில் மனச்சாடசிக்கும் நேர்மைக்கும் மட்டும் அடிபணிந்து இப்பிரதேசத்தில் தாங்களாற்றிய கல்விப் பணிகளால் பயன்பெற்ற மாணவச் செல்வங்களின் உயர்வு "தங்களின் ஒய்வு காலத்தைப் பசுமையாக்கும்" தங்களை வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

**மதிப்பிற்குரிய க.தனபாலசிங்கம் அவர்களே!**

தாங்கள் இக்கல்லூரியின் மீது கொண்ட அக்கறையினை நாம் அறிவோம். தாங்கள் ஒய்வு பெற்றபோதிலும் எம்மீதும், எம்பள்ளிமீதும் தாங்கள் கொண்ட அன்பையும் மதிப்பையும் நாம் பெருமையாகவே கருதுகின்றோம். தாங்கள் கல்லூரி உயர்வு மீது கொண்ட கனவு இன்று பலித்து வருகின்றது. இதைக்கண்டு மகிழ்வெய்துவீர்கள் என்று கருதுகின்றோம். தங்களை வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

**நினைவுப் பேருரை ஆற்ற வந்திருக்கும் பதில் நீதிபதி திரு. வசந்தசேனன் அவர்களே!**

இன்றைய நிறுவுனர் தினம் கடந்த இரு ஆண்டுகளின் பின் வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. எமது கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவனும் கல்லூரி நிறுவுனர் குடும்பத்தவரான தாங்கள் இன்று நினைவுப் பேருரையை ஆற்ற வந்தமையிட்டு நாம் பெருமையும் பெருமகிழ்வும் கொள்கின்றோம். கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவராக விளங்கும் தங்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

**எனது வருகையும் கல்லூரியும்**

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் 12 ஆண்டுகள் அதிபராக கடமையாற்றிய நான் பல்வேறு தரப்புக்களினதும், கல்வித்திணைக்களத்தினதும், வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியாத சூழ்நிலையில் 1000இற்கு மேற்பட்ட மாணவர்களையும், 50க்கும் மேற்பட்ட ஆசிரியர்களையும், சிறந்த கட்டட பௌதீக வளங்களையும் கொண்ட என்வாழ்நாளில் அதிபர் சேவையில் பெரும் நிறைவையும், திருப்தியையும் தந்த கல்லூரியை விட்டு 2005-04-22இல் இக்கல்லூரியின் அதிபராக கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டேன். இப்பிரதேசத்தின் புகழ்வாய்ந்த கல்லூரியாக விளங்கிய மானிப்பாய் இந்துக்கல்லூரி மீண்டும் உன்னதநிலையை அடையவேண்டுமென்ற அவா. அனைத்து மட்டங்களிலும் காணப்பட்டது. அந்நிலையில் ஆசிரியர்கள், பழையமாணவர்கள், பெற்றோர்கள், கல்வித்திணைக்களம் அரசசார்பற்ற நிறுவனம் என பலதரப்பட்ட ஆதரவு கிடைத்ததன் காரணத்தால் மிகக்குறுகிய காலத்தில் கற்றல் செயற்பாட்டிலும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் பெருவெற்றி பெற்றுள்ளோம்.

கடந்த இரண்டாண்டுகளில் :- கல்விச்செயற்பாடுகளில் 2004ல் 36%மாக இருந்தது. கா.பொ.த சாதாரணப் பெறுபேறுகள் 2005இல் 53% ஆகவும் 2006இல் 50% ஆகவும் உயர்வு பெற்றதுடன் செல்வன் S.சுபாங்கன் 10Aயும் செல்வன் ஏ.டினேஸ் 9ABயும் பெற்று உயர்வு அடைந்துள்ளனர். 2006இல் செல்வன்.த.றஜீவன் நீண்டகாலத்தின் பின் மருத்துவப்பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. பௌதீகவள அபிவிருத்தியில் ஐம்பதுஇலட்சம் பெறுமதியான தளபாட உபகரணங்கள் கட்டடஅபிவிருத்தியும் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுத்துறையில் துடுப்பாட்டம், உதைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் போன்ற அணிகள் பல்வேறு வெற்றிகளை ஈட்டியுள்ளன. 8ஆண்டுகளின் பின் 2006இல் புதிதாக கரப்பந்தாட்ட அணி உருவாக்கப்பட்டு மாவட்டத்தில் 2ம் இடத்தைப்பெற்று மாகாணப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

18புதிய ஆசிரியர்கள் உள்ளீர்க்கப்பட்டு கற்றல்கற்பித்தல் நிகழ்வுகள் வளப்படுத்தப்பட்டுள்ளன. இவை அனைத்துத்தரப்பினரதும் ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைத்தமையே. எனவே இவ்விடத்தில் அனைத்து உள்ளங்களிற்கும் நன்றி கூறி நிற்கின்றேன். இவரின் சேவைக்கு நன்றி கூறுகின்றேன்.

## மாணவர் விபரம்

| | |
|---|---|
| கனிஷ்ட இடைநிலை | 232 |
| சிரேஷ்ட இடைநிலை | 306 |
| உயர்தரம் | 216 |
| மொத்தம் | 754 |

**ஆசிரியர் விபரம்**

| | |
|---|---|
| நிரந்தரம் | 34 |
| தொண்டர் | 03 |

**கல்விசாரா ஊழியர்**

நிரந்தரம் 05

**உதவிக் கல்விப்பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுச் சென்ற ஆசிரியர்**

பதவி உயர்வு பெற்ற திரு.சி.குகனேசன் அவர்கள் 2005ம் ஆண்டு கல்லூரியின் பௌதீக மறுசீரமைப்பில் முற்றுமுழுதாக தன்னை அர்ப்பணித்து பணியாற்றியவர். இன்றைய கல்லூரியின் புதிய_தோற்றத்திற்கு மிகப்பெரும் பங்களிப்புச் செய்தவர். என்ற வகையில் நன்றி கூறுகிறேன்.

**அதிபர்களாக பதவியுர்வு பெற்றுச்சென்ற பகுதித்தலைவர்கள்**

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அதிபராக பதவி உயர்வு பெற்றுச் சென்ற திரு,வ.ஸ்ரீகாந்தன் அவர்கள், யா/துணைவி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அதிபராக பதவி உயர்வு பெற்றுச்சென்ற திரு.வி.யோகேஸ்வரன் அவர்கள் இருவரும் இக்கல்லூரியில் ஆற்றிய பணிகளுக்கு நன்றி கூறுகிறேன்.

**இடமாற்றம் பெற்றுச் சென்ற பிரதி அதிபர்**

கடந்த 34 வருடங்களாக ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் கடமையாற்றிய திரு.வே.தம்பாபிள்ளை அவர்கள் கல்லூரியில் ஆற்றிய பெரும்பணிகளுக்கு நன்றி கூறுகிறேன்.

**இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்**

திரு.சி.முத்துலிங்கம், திரு,ந.லோகேஸ்வரன், திரு.அ.சுபாஸ்கரன், திரு,ம.அ.ரூபநாதன், திரு.வி.தர்மசீலன், திரு.அ.அருளாளன், திருமதி.லோ.குலேந்திரன், திருமதி.ந.தியாகராசா, திருமதி.கு.ஜெயசூரியர், திருமதி.ம.கிருபாகரன், திருமதி.ம.ஜெயநாதன், திருமதி.வி.ஜெயதேவன், திருமதி.ம.பாஸ்கரன், செல்வி.து.உருத்திரகுமாரி, ஆகியோர் இக்கல்லூரியில் ஆற்றிய பணிகளுக்கு நன்றி கூறுகிறேன்.

**கல்லூரியில் இணைந்த ஆசிரியர்கள்**

திருமதி.ம.குகன், திருமதி.வி.சிவகுமார், செல்வி.செ.செல்லத்துரை, திரு.சு.சாந்தகுமார், திரு.பெ.வசந்தன், திரு.க.சிவபாதம், திரு.செ.சரத்சந்திரன், திரு.சா.வ.தயாநிதி, திரு.சா.கஜன், திரு.சி.சிவகாந்தன், திருமதி.ச.சிவகுமார், திருமதி.அ.சிவஞானம், திருமதி.ச.பாலமுகுந்தன், செல்வி.சி.கிறிஸ்ரி, செல்வி.வி.அல்பேட், செல்வி.நி.திருநாவுக்கரசு, செல்வி.ஐ.விக்கினேஸ்வரன், செல்வி.நி.பக்ததேவன் ஆகியோர் எமது பாடசாலைக்கு மாற்றம் பெற்றும் புதிய நியமனம் பெற்றும் வந்துள்ளனர். இவர்களது சேவை சிறக்க வாழ்த்துகின்றேன்.

**இளைப்பாறிய ஆசிரியர்**

ஆசிரியர் திருமதி.கி.பவசிங்கம் எமது பாடசாலையில் 27 வருடங்கள் ஆற்றிய சேவையை நன்றியோடு நினைவு கூர்ந்து அவர்கள் தேக ஆரோக்கியத்துடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**அமரத்துவம் அடைந்த இளைப்பாறிய ஆசிரியப் பெருந்தகைகள்**

முன்னாள் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர் செல்வி.போ.கந்தசாமி, திருமதி.பரமசாமி 24.06.2007 அன்று சிவபதமடைந்த பண்டிதர் சு.வேலுப்பிள்ளை (சு.வே) ஆகிய இவ்வாசான்களை நினைந்து அஞ்சலி கூறுகின்றேன்.

## விளையாட்டுத்துறை

எமது மாணவர்கள் கோட்ட, வலய, மாவட்ட மட்டங்களின் விளையாட்டுத்துறையில் பல விருதுகளைப் பெற்றுள்ளார்கள். விருதுகள் பெற்ற மாணவர்களை பாராட்டி அவர்களின் விபரங்களை கீழே சமர்ப்பிக்கின்றேன்.

**மெய்வல்லுனர் நிகழ்ச்சிகள்**

செல்வன்.சி. வினோத் - வலயமட்ட சிறந்த வீரன் (19 வயதின் கீழ்)
செல்வன் அ. நிரோஜன் - வலயமட்ட சிறந்த வீரன் (15 வயதின் கீழ்)

**துடுப்பாட்டம்**

எமது கல்லூரியின் துடுப்பாட்டக்குழுவில் இடம்பெற்ற செல்வன்.சி.விநோத் 19வயதின் கீழ் தேசிய அணியில் இடம்பெற்று மலேசியா சென்று பல போட்டியில் பங்குபற்றி எமது கல்லூரிக்கு பெருமை தேடித்தந்தார்.

யாழ் வர்த்தக வங்கி 2005ம் ஆண்டில் 17 வயதின் கீழ் துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் எமது கல்லூரி 1ம் இடத்தைப் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**உதைப்பந்தாட்டம்**

எமது பிரதேசத்தில் உதைப்பந்தாட்டத்தில் தனியிடம் பெற்று பல போட்டிகளிலும் பதக்கங்களை பெற்று சாதனை படைத்துள்ளார்.

2005இல் 19வயதின் கீழ் மாவட்டம் இரண்டாம் இடம்
2005இல் 15வயதின் கீழ் கோட்டம் முதலாம் இடம்
2005,2006இல் 19வயதின் கீழ் மாவட்டம் இரண்டாம் இடம் பெற்று மாகாணமட்ட போட்டிக்கு தகுதியானபோதும் நாட்டின் சூழ்நிலை காரணமாக கலந்து கொள்ள முடியவில்லை.
வலயமட்டம் 1ம் இடம் 2004
நட்சத்திரங்களின் போர் 1ம் இடத்தை 2004, 2005இல் பெற்றது.
சாவகச்சேரி இந்துக்கல்லூரி நூற்றாண்டுவிழா - 1ம் இடத்தைப் பெற்றது.

**கரப்பந்தாட்டம்**

கல்லூரிஅண்மைக்கால வரலாற்றில் முதன்முதலாக உருவாக்கப்பட்ட கரப்பந்தாட்ட 15வயதின் கீழ் அணி 2006ம் ஆண்டில் மாவட்ட மட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்றும் சூழ்நிலை காரணமாக கலந்து கொள்ள முடியவில்லை. 2007லும் 15,17வயது பிரிவுகள் வலயமட்டத்தின் வெற்றி பெற்று மாவட்டப் போட்டியில் கலந்து தமது தொடர்ச்சியான பதிவுகளை செய்து வருகின்றனர்.

**மேசைப்பந்தாட்டம்**

வலயமட்டம் 3ம்இடம் பெற்றுக் கொண்டது.

மேற்படி வெற்றிகளுக்கு வழிகாட்டிய விளையாட்டுத்துறைமுதல்வர் திரு.சி.உதயணன், செயலாளர்.திரு.பெ.வசந்தன் ஆகியோருக்கும் இவர்களுக்கு உறுதுணையாகவிருக்கும் ஆசிரியர்களான திரு.வீ.கிருஷ்ணராஜா, இவர்களை வழிப்படுத்தும் உப அதிபர் சி.உதயபாலன் அவர்களுக்கும் திரு.சு.சாந்தகுமார், திரு.லிங்கேஸ்வரன், திரு.இ.சசிகுமார் ஆகியோர்களுக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆசிரியர் கழகம்**

இக்கழகத்தின் தலைவராக உப அதிபர் திரு.சி. உதயபாலன், செயலாளராக ஆசிரியர் திரு.ச. தேவராசா, பொருளாளராக ஆசிரியர் திருமதி.ச. சிவகுமார் ஆகியோர் இணைந்து செயற்பட்டு சகல நிகழ்வுகளையும் முன்னெடுத்து வருகின்றனர். இவர்களுக்கு எனது நன்றிகள்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

இச்சபையின் செயலாளராக திரு.ந. விவேகானந்தராஜா அவர்களும், பொருளாளராக ஆசிரியர் திரு.பொ.தயானந்தன் அவர்களும் பாடசாலையின் செயற்பாடுகளில் தம்மால் இயன்ற பங்களிப்பை ஆற்றி வருகின்றனர். இச் சங்கத்தின் தலைவராக இ.வசந்தசேனன் அவர்களும் செயலாளராக திரு.S.சிவகுமார் அவர்களும், பொருளாளராக கி.சாந்தாகிருஸ்ணனும் செயற்பட்டு வருகின்றனர். இவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## மன்றங்கள்

**உயர்தர மாணவர் மன்றம்**

இம்மன்றத்தின் தலைவராக செல்வன்.எ.டினேஸ் செயலாளராகவும், செல்வன்.சி.விநோத் பொருளாளராகவும், வெல்வன்.யோ.பார்த்திபன் ஆகியோர் இருக்கின்றனர். இம்மன்றத்தின் செயற்பாடுகளை பொறுப்பாசிரியர் திரு.சு.சாந்தகுமார் சிறப்பாக வழிநடத்தி வருகின்றார். வருடாவருடம் உயர்தர மாணவ ஒன்று கூடலை சிறப்பாக நடாத்தி வருகிறது. இவர்களுக்கு எமது நன்றிகள்.

**தமிழ் மன்றம்**

மாணவர்களின் தமிழ்மொழிப்புலமையை வளர்க்கும் செயற்பாடுகள் இம்மன்றத்தினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றது, கோட்ட, வலயமட்ட தமிழ்த்தினப்போட்டிகளில் பல்வேறு பரிசில்களைப் பெற இம்மன்றச்செயற்பாடுகள் உதவியுள்ளன. இம்மன்றத்தின் பொறுப்பாசிரியர்களான திருமதி.ச.சிவகுமார், திருமதி.அ.சிவஞானம் ஆகியோர்களின் செயற்பாடுகள் சிறப்புற எனது நல்லாசிகள்.

**இந்து மாமன்றம்**

இம்மன்றத்தின் பொறுப்பாசிரியராக திரு.ச.தேவராசா அவர்கள் நாயன்மார்கள் குருபூசைத்தினங்கள், எமது பாடசாலை பங்கேற்கும் வருடாந்த கீரிமலை நகுலேஸ்வர மகோற்சவம், திருக்கேதீஸ்வர எட்டாம் திருவிழா, நவராத்திரி, என்பவற்றை தனது மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தி வருகின்றார். அவர்களுக்கு எனது நன்றிகள்.

**கிறிஸ்தவ மன்றம்**

இம்மன்றத்தின் தலைவராக செல்வன்.யோ. ரஜீவன், செயலாளராக செல்வன்.பி. நிருபன், பொருளாளராக செல்வன்.ம. மரியகொன்ஸ்ரைன் ஆகியோர் உள்ளனர். பொறுப்பாசிரியர் செல்வி.வி. அல்பேட் இம்மன்றத்தின் செயற்பாடுகளை ஊக்குவித்து வருகின்றனர். அவர்களுக்கு எனது நன்றிகள்.

**ஆங்கில மன்றம்**

இம்மன்றத்தின் பொறுப்பாசிரியராக செல்வி.தே. கேமலோஜினி, திரு.பொ. தயானந்தன் அவர்களும், உதவி ஆசிரியர்களாக செல்வி.சுபாசினி, செல்வி.கிறிஸ்ரி, செல்வி.நி.பக்ததேவன் செல்வி. டர்மினி ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர். ஆங்கில நாடகப்போட்டியில் கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகளில் கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றன. இவர்களுக்கு எனது நன்றிகள்.

**சாரணிய இயக்கம்**

இம்மன்றத்தின் பொறுப்பாசிரியராக திரு.பெ. வசந்தன் அவர்கள் சிறப்பாக கடமையாற்றுகின்றார். பாடசாலைச் செயற்பாடுகள், மருதடி விநாயகர் வருடாந்த மகோற்சவம், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு, சிரமதானப்பணி, சமூகநிகழ்வுகள் என்பவற்றில் பங்குபற்றி பல முன்னெடுப்புக்களை புரிந்து வருகின்றது. இவர்களுக்கு எனது நன்றிகள்.

**இடைவினைக் கழகம்** (Interact Club)

இம்மன்றத்தின் தலைவராக செல்வன்.தி.முகுந்தன், செயலாளராக செல்வன்.சூ.சுஜீவன், பொருளாளராக S.சிற்றமணன் ஆகியோர் உள்ளனர். பொறுப்பாசிரியராக திரு.சி. சிவகாந்தன் சிறப்பாக வழிநடத்தி வருகின்றார். அவர்களுக்கு எனது நன்றிகள்.

**பாண்ட் வாத்தியக்குழு**

இக்குழுவின் பொறுப்பாசிரியர்களாக செல்வி.சி.கிறிஸ்ரி, திருமதி.ஸ்ரீ.தெய்வேந்திரன் ஆகியோர் உள்ளனர். பாடசாலை நிகழ்வுகளிலும் கோட்டமட்ட நிகழ்வுகளிலும் சிறப்பாக பங்குகொள்கின்றனர். இவர்களுக்கு எனது நன்றிகள்.

## பழைய மாணவர் சங்கங்கள்

1) OSA, MHC, UK
   - President :- Mr. J. Amirthan Rajakariar
   - Secretary :- Mr. A. Kumararajan
   - Treasurer :- Mr. A. Thirumoolan
2) OBA, MHC, UK
   - President :- Mr.D. Rabindramohan
   - Secretary :- Mr.T. Constantine
   - Treasurer :- Mr. R. Yoganathan
3) OSA, MHC, CANADA
   - President :- Mr.S. Ganeshalingam
   - Secretary :- Mr.S. Rajanayangam
   - Treasurer :- Mr.R. Nalin
4) OSA, MHC, COLOMBO
   - President :- Dr.A. Ramanathan
   - Secretary :- Mr.N. Naguleswaran
   - Treasurer ;- Mr.S. Srithara

இவ்வனைத்து சங்கங்களும் கல்லூரியின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகின்றன. இச்சங்கங்களும் எனது பாராட்டுக்களும், நன்றிகளும்.

## கல்லூரி வளம் பெறப்பங்களித்தவர்கள் 2005/2006

❋ வகுப்பறைச்சீரமைப்பு, வர்ணம்பூசுதல், உள்ளகவீதிகள் அமைத்தல்.
அலுவலகப்புனரமைப்பு
10லட்சம் பழைய மாணவர் சங்கம்
OSA (U.K)

❋ மஸ்கன் கட்டிடப்புனரமைப்பு
3 லட்சம் - மஸ்கன் நிறுவனம்

❋ இரசாயன ஆய்வுகூடப் புனரமைப்பு
5,25,000/= கல்வித்திணைக்களம்

❋ போட்டோ பிரதி இயந்திரம், மல்ரிமீடியா (Multi media) கணனிகள்
சிறுவர் பாதுகாப்பு நிதியம்

❋ மாணவர் கதிரைகள் : 206
மேசைகள் : 206
சிறுவர் பாதுகாப்பு நிதியம்

❋வகுப்பறைப் புனரமைப்பு 250,000/=
சிறுவர் பாதுகாப்பு நிதியம்

❋மாணவர் கதிரைகள் : 210
மேசைகள் : 210
யுனிசெப் நிறுவனம்

❋நூலகப்புனரமைப்பு, உதைப்பந்தாட்ட சீருடை 150000/=
ஹற்றன் நஷனல் வங்கி

❋விஞ்ஞானகூட புனரமைப்பு 100000/=
OBA (லண்டன்)

❋திரு.P.வாதவூரர் - நூலக சம்பளம் : 40000/=

❋பாடசாலை வளாக சீரமைப்பு - உலக உணவுத்திட்டம்

❋உள்ளக வீதி புனரமைப்பு - திரு.S.சிவராஜேஸ்வரன் 40000/=
விளையாட்டு உபகரணங்கள்
பழைய மாணவர் சங்கம் கொழும்பு

மாணவர் மதிய உணவுத்திட்டத்திற்கு மேலதிக அனுசரனை. 130,000/=
பழைய மாணவர் சங்கம் கனடா.

மேற்படி வளங்களை வழங்கி மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை மேன்மையடையச்செய்த அனைவர்க்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

## நன்றியுரை

இக் கல்லூரி வளர்ச்சியில் தன்னால் இயன்ற உதவிகளையும் வழிகாட்டல்களையும் வளங்கி வரும் எமது மாகாணக்கல்விப் பணிப்பாளர் திரு.வீ. இராசையா அவர்களுக்கும், ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி கல்விச்செயற்பாடுகளிலும் இணைப்பாட செயற்பாடுளிலும் ஊக்கத்தையும் வழிகாட்டல்களையும் வழங்கி வருகின்ற எமது வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.ப.விக்னேஸ்வரன் அவர்களுக்கும், பிரதிக்கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அவர்களுக்கும், எமது கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.சி.கந்தசாமி அவர்களுக்கும், கணக்காளர், பொறியிலளார் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

இந்த இடத்தில் எமது முன்னாள் கல்விப்பணிப்பாளர் திருமதி.றெ.இருதயநாதன் அவர்களுக்கும், முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.க.தனபாலசிங்கம் அவர்களுக்கும், இக் கல்லூரியில் உயர்வுக்கு அவர்கள் ஆற்றிய பணிகளுக்காக மீண்டும் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். எனது நிர்வாக கடமைகளில் பங்காற்றி வரும் பிரதி அதிபர், உப அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன். கல்லூரி உயர்வுக்கு பங்களித்து வரும் பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கங்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து மனநிறைவோடு இவ் அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

**ச.சிவநேஸ்வரன்**
**அதிபர்**

# PRIZE GIVING - 2007
## PRIZE LIST - 2006

**GRADE 6**

1) E. Thuvarahan :- General Proficiency, Tamil, Enviromental Studies, Aesthetic Studies,Health Science & Saivism.
2) R. Niruban :- Maths & English.
3) V. Patric Prasanna :- Christianity.
4) A. Nithurshan :- General Proficiency.
5) S.Joy Premkumar :- General Proficiency.

**GRADE 7**

1) G.Thanusiyan :- General Proficiency, Tamil, English, Mathematics, Saivism, Music and Health & Physical Education.
2) G. Gajavathanan :- Saivism
3) K. Tharshan :- Science, Social Studies & Art.
4) M. Nirujan :- General Proficiency.
5) A. Nishankan :- Christianty.

**GRADE 8**

1) Sri Kavipiriyan :-General Proficiency, Tamil Language, English Language,Science, Social Studies, Saivism, Music&Health Physical Education.
2) U. Jeisin :- Art.
3) A.vijayaruban :- Christianty
4) T. Kokulan :- Mathematics.
5) J. Thanosan :- General Proficiency.
6) R. Thinesh :- General Proficiency.

**GRAGE 9**

1) O. Karthikeyan :- GeneralProficiency, Mathematics, Science, English & Social Studies.
2) R. RometAnnciley :- Health & Physical Education & Christianty.
3) R. Umashankar :- Saivism.
4) B. Mohanraj :- Music.
5) R. Darsan :- Art.
6) K. Thushanthan :- Tamil.
7) K. Parutheesan :- General Proficiency.
8) T. Aravinthan :- General Proficiency.

**GRADE 10**

01) P.Keerthanan :- Tamil, English, Mathematics & Music.
02) S. Uthayaraj :- General Proficiency, Social Studies, Geography & Tamil Literature.
03) P. Prabahar :- Science, Drama & Theatre and Health & Physical Education.

04) B. Saciraj :- Saivism
05) J. Johnsan :- Christianity.
06) K. Divojan :- Art.
07) A. Thanes :- Commerce
08) M. Shiyamalan :- Agriculture.
09) S. Hemanantha :- Development Studies.
10) V. Venthan :- Information and Communication Technology.
11) R. Ajith :- Building Construction.
12) S. Prematheesan :- General Proficency.

**G.C.E (O/L) :- 2006 December**

1) Srikanthan Subankan :-10A (Tamil Language, English Language, Mathematics, Science, Social Studies, Music, CommerceGeography, Saivism, Tamil Literature ).
2) Elias Dinesh :-9 A,B.(Tamil Language, Christainty,Mathematics,Tamil Literature, Art, Science,Social Studies, Developement Studies & Commerce.

**12 ARTS :- 2008**

1) S. Sivaruban :- General Proficiency, Tamil, Hindu Civilization & Gegrophy.
2) S. Inthujan :- General Proficiendy, Logic & Scientific Mtd. and Drama & Theatre.
3) S. Jegan :- Gegrophy.
4) S. Gajan :- Drama & Theatre.

**12 Science :- 2008**

1. T. Theepan :- General Proficiency, Chemistry, Physics & Biology.
2. S. Kiruthigan :- Combined Maths.
3. J. Thujeevan :- English.

**COMMERCE :- 2008**

1) S. Kabilraj :- General Information Techonology
2) V. Lorenz Mayuran :- General Proficiency, Accounts, Economics & Commerce.

**ARTS :- 2007**

1) S. Balaramanan :- Hindu Civilization, Logic and Scientific MTd.
2) N. Satheeswaran :- Tamil and Logic and Scientific Mtd.
3) K. Sinthujan :- Geography.
4) P. Nirujan :- Christiainty.
5) P.Kajanthan :- Drama & Theatre.

**13 SCIENCE :- 2008**

1) K. Thananansan :- General Proficiency, Chemistery, Physics & Comined Mathas.
2) S. Karunakaran :- Biology.

**13 COMMERCE :- 2007**

1)T. Thushyanth :- General Proficiency, Accounts, Commerce & English.
2) E. Thanesh :- Economics.

***obtaining 'A' s at the G.C.E. A/L Examination April 2006***

1) Jeyaraah Rajeevan :- Physics.
2) Kanesh Sayanthan :- Accounts.
3) Anthonypillai Jebanesan :- Christianity.
4) Jeyarajasingam Jeyamohan :- Christianity.
5) Sivapatham . Sivavannan :- Hindu Civilization.
6) Kanthasamy. Suhumar :- Logic & Scientific
7) Mahendran. Sutharsan :- Tamil & Logic & Scientific

**ENTRANCE TO THE UNIVERSITY**

1) Jeyarajah Rajeevan :- Medicine.
2) Mahendran Sutharsan :- Arts
3) Ariam Kokularamanan :- Physical Science.
4) Sivarasa Sasitharan :- Unani Medicine.
5) Thiruvancheeswaran Soruban:- Siddha Medicine.
6) Muthulingam Ramanan :- Physical Science.
7) Balachandran Vijitharan :- Bio Science.

**Best Students 2004, 2005**

Best Student in 2004 and 2005 S. Kavipriyan
O. Karthikeyan
P. Keerthanan
S.Subhankan
T. Muhunthan.
G. Thanushiyan

**G.C.E (O/L) 2004 Results.**

1. Thushyanth :-9A in Tamil Language, English Language, Science & Techonology, Mathematics, Social Studies, Music, Tamil Literature, Christianity & Development Studies.
2. S. Vinoth :- 6A in Tamil Language , Science & Techonology Mathematics, Development Studies, Saivism, Health & PhysicalEducation.

**Distinctions at G.C.E (A/L) 2004**

1. T. Janarth :-Combined Mathematics
2. N. Senthuran :- Economics.
3. B. Eesan :- Economics.
4. A. Vaseekaran :- Business Studies.

**UNIVERSITY ADMISSIONS**

1. T. Janarath :- Physical Science
2. N. Senthuran :- Commerce
3. B. Eesan :- Commerce
4. C. Nitharsan :- Arts

**G.C.E (O/L) 2005 Results**

1. T.Theepan :- 7A in Saivism, Tamil Lanuage, Science & Techonology, Mathematics, Social Studies, Tamil Literature & Commerce.
2. T. Mugumthan :- 6A in Saivism, Tamil Language, Science & Techonology, Mathematics, Music & Commerce.

***Distinctions at G.C.E (A/L) 2005***

1) M. Kannathasan :- Economics.
2) K. Kapilan :- Logic & Scientific Method.
3) F.V. Satheeskkumar :- Christianity.
4) S.Pratheepan :- Logic & Scientific Method, Hindu Civilization
5) P. Sutharsan :- Logic & Scientific Method, Hindu Civilization.
6) E.Suthakaran :- Logic & Scientific Method.

**UNIVERSITY ADMISSIONS :- 2005**

1. P. Sutharsan :- Arts.

**J/MANIPAY HINDU COLLEGE**

**SPECIAL AWARDS 2007 PRIZE DAY**

*MUTHUVETPILLAI MEMORIAL SCHOLARSHIP FOR BEST PERFORMANCE IN G.C.E O/L 2006

1. SRIKANTHAN SUBHANKAN

*CHARI MEMORIAL SCHOLASHIP

2. ELIYAS DINESH

*PERAYIRAVAR MEMORIAL SCHOLARSHIP FOR ALL ROUNDER IN

1. GRADE 06 - P. SARUJAN
2. GRADE 07 - N. DENIS
3. GRADE 08 - S. VINOTHARAJ
4. GRADE 09 - S. YALINIYAN
5. GRADE 10 - P. KEERTHANAN

*PRIZE DONATED BY LION S. THANGARAJAH IN THE NAMEOF MR.M.THEVARAJAH FOR BEST PERFORMANCE IN ENGLISH O/L 2006

1. SRIKANTHAN - SUBHANKAN

*W.G.ANNAPPAH MEMORIAL SCHOLARSHIP DONATEDBY MR.A.JEYARAJAH FOR THE BEST SCOUT

2. T. SASIKARAN

*R.V.ARUMUGAM MEMORIAL SCHOLARSHIP DONATED BY DR.A.RAMANATHAN FOR A/L 2006

JEYARAJAH RAJEEVAN MAHEN SUTHARSAN

*DR.N.RAJANATHAN MEMORIAL SCHOLARSHIP SPONSORED BY HIS SISTER FOR BEST PERFORMANCE IN BIOLOGY A/L 2006

JEYARAJAH RAJEEVAN

*SIVARAJENDDRA MEMORIAL SCHOLARSHIP SPONSORED BY MR.R.VASANTHASENAN AND MR.R.VASANTHAKUMAR FOR BEST PERFORMANCE IN ENGLISH

GRADE 06 - R.NIRUBAN
GRADE 07 - G.THANUSHIYAN
GRADE 08 - SRI.KAVIPRIYAN

*VANNIYASINGHAM SCHOLARSHIP FOR BEST PERFORMANCE IN TAMIL A/L 2006

MANENDRAN SUTHARSAN

*PRIZE DONATED BY MR.S.SIVARAJEESWARAN IN MEMORY OF HIS PARENTS LATE MR&MRS. SIVARATHNAM FOR BEST PERFORMANCE IN DRAMA & THEATRE A/L 2006

THARMAGUNACHANDRAN VARMAN

⁕MUTHUVETPILLAI SCHOLASHIP G.C.E O/L 2007 MAY - 2008 APRIL.

T. THEEPAN

**MEMORIAL PRIZES**

1. THIRUVANCHEESWARAN SORUBAN - This prize is donated by Mrs. Kalaichelvi Jeyaraj in memory of her Mother late Mrs. Manonmani Thiyagarajah.
2. MUTHULINGAM RAMANAN - This prize is donated by Mrs. Jeyanthy in memory of her mother late Mrs. Ponmalar Thavapragasam.
3. BALACHANDRAN VIJITHARAN - This prize is donated by Mr. Venkadesh Luxman in memory of his father late Mr. Vanniyasingam.

**J/MANIPAY HINDU COLLEGE**

**SPECIAL AWARDS 2006 PRIZE DAY**

⁕MUTHUVETPILLAI MEMORIAL SCHOLARSHIP FOR BEST PERFORMANCE IN G.C.E O/L 2005

THEIVENDRAM THEEPAN

⁕CHARI MEMORIAL SCHOLARSHIP

THILLAIAMPALAM MUHUNTHAN

⁕PERAYIRAAVAR MEMORIAL SCHOLARSHIP FOR ALL ROUNDER IN

GRADE 06 - P.SAKTHIBAHAN
GRADE 07 - S.SIVANESAN
GRADE 08 - R.ROMET ANNCILEY
GRADE 09 - A.THANES
GRADE 10 - S.SIVATHEEPAN

⁕PRIZE DONATED BY LION S.THANGARAJAH IN THE NAME OF MR.M.THEVARAJAH FOR BEST PERFORMANCE IN ENGLISH O/L 2005

JEYARAJAH THUJEEVAN

⁕W.G.ANNAPPAH MEMORIAL SCHOLARSHIP DONATED BY MR.A.JEYARAJAH FOR THE BEST SCOUT

T.HURAIRAJAH JANOTH.

⁕R.V.ARUMUGAM MEMORIAL SCHOLARSHIP DONATED BY DR.A.RAMANATHN FOR BEST PERFORMANCE GEOGRAPHY A/L 2005

NO ACHIEVEMENT

⁕DR.N.RAJANATHAN MEMORIAL SCHOLARSHIP SPONSORED BY HIS SISTER FOR BEST PERFORMANCE IN BIOLOGY A/L 2005

NO ACHIEVEMENT

⁕SIVARAJENDRA MEMORIAL SCHOLARSHIP SPONSORED BY MR.R.VASANTHASENA AND MR.R.VASANTHAKUMAR FOR BEST PERFORMANCE IN ENGLISH

1) GRADE 06 - G.THANUSHIYAN
2) GRADE 07 - SRI.KAVIPRIYAN
3) GRADE 08 - R. ROMET ANNCILEY

❋VANNIYASINGHAM SCHPLARSHIP FOR BEST PERFORMANCE A/L

ARIYAM KOKULARAMANAN

❋PRIZE DONATED BY MR.S.SIVARAJEESWARAN IN MEMORY OF HIS PARENTLATE MR&MRS.SIVARATHNAM FOR BEST PERFORMANCE IN A/L

SIVARASA SASITHARAN

❋MUTHUVETPILLAI SCHORLISHIP G.C.E O/L 2006 MAY - 2007 APRIL

T.THUSHYANTH

❋Swami Vipulananda English Prize Donated by Mr.N. Vivekanantharajaj 2006 O/L

1.K. Lingaran
2.S. Subankan

❋Thurairatnam Mathematic Prize for best Student in Mathematics in G.C.E O/L 2006

1.S. Subankan
2.E. Dinesh

❋Dr. Patkunarasah Memorial Chemistry Prize donated by Miss.S. Nagalingam.

1. J. Rajeevan
2. A. Kokulayamanan

❋ Prize donated by late Miss. P.Kandasamy Emeritus Principal Pandaterruppu Girls College for best performance in Grade 7.

1) A. Nisankan

**CRICKET - 2005**

| | | |
|---|---|---|
| Best Bat's Man | - | Y.Partheepan |
| Best Bowler | - | S.Vinoth |
| Best Fielder | - | K.Pirasanna |
| Best All Rounder | - | S.Vinoth. |

**2005 SPECIAL PRIZES**

| | | | |
|---|---|---|---|
| S.Amalrai | - | 108 | Against's Victoria College |
| Y.Partheepan | - | 110 | ,, ,, ,, |
| S.Vinoth | - | 112 not out | Jaffna Central College |

**2006 Cricket Prizes**

| | | |
|---|---|---|
| Best Bat's Man | - | S.Vinoth |
| Best Bowler | - | S.Vinoth |
| Best All Rounder | - | S.Vinoth |
| Best Fielder | - | R.Thinesh |

## 2005
## CRICKET CHAMPIONS (JOINT) - UNDER 17
## (JAFFNA DISTRICT)

1.S.Jeevanatham (Cap)
2.S.Vinoth (V.Cap)
3.J.Jeradsan
4.R.Thinesh
5.T.Logapamilan
6.S.Gunaseelan
7.J.Shiyalan
8.R.Sriramanan
9.K.Theepanraj
10.A.Haritharan
11.N.Rajnarayanan
12.K.Shanthakumar
13.P.Sajeevan
14.T.Subatheepan

## 2005
## "SOCCER" RUNNER UP DISTRICT LEVEL - UNDER 19 2005

1.k.Pirasanna
2.P.Janarthan
3.P.Mahinthan
4.E.Sathees
5.S.Vinoth
6.N.G.Roxsan
7.J.Jerudsan
8.K.Ganeshananth
9.K.Surenthiran
10.Amiraj
11.S.Jeevanantham
12.Arudkumaran
13.S.Ajith
14.T.Sarangan

## 2006
## VOLLEY BALL - RUNNER -UP UNDER 15
## (JAFFNA DISTRICT)

1. W.Sulaxan
2. Sujan
3. A.Nirojan
4. Divakalal
5. S.Sathees
6. P.Keerthanan
7. S.Sabesan
8. R.Darshan
9. K.Thusanthan
10. R.Amirthan

**2006**

**SOCCER - RUNNER - UP JAFFNA DISTRICT LEVEL UNDER**

01. J.Jerudsan
02. S.Vinoth
03. S.Jeevanantham
04. S.Thileepan
05. Sivaruban
06. T.Arudkumaran
07. S. Sasitharan
08. N.G.Roxsan
09. Bakirathan
10. N. Kapilan
11. Sutharsan
12. Keethees
13. P. Sajeevan

## அறிவுப் போட்டி.

2006ம் ஆண்டில் நடைபெற்ற பின்வரும் மாணவர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள போட்டிகளில் பங்குபற்றி பாடசாலைக்கு பெருமையை தேடித்தந்துள்ளார்கள். அவர்களுக்கு எனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

| போட்டி | விடயம் | தரம்/பிரிவு | மாணவரின் பெயர் | வலயமட்டம் |
|---|---|---|---|---|
| 1.கணிதம் | வினாடிவினா | 9 | உ.கார்த்திகேயன் | 1 |
| 2.விஞ்ஞானம் | வினாடிவினா | 7 | ஜீ.தனுசியன் | 3 |
| 3.சங்கீதம் | இசை,தனி | பிரிவு II | கா.கோகுலன் | 2 |
| 4.வர்த்தகம் | அறிவனை | 12,13 | த.துஸ்யந்தன் | 2 |
| 5.விஞ்ஞானம் | அரைத்தல் | 10,11 | ம.அனஸ்ரின் | 3 |

## கோட்ட மட்டத்தில் முதலாம் இடம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | தமிழ் விவாதம் | 5 | பொ.தனேஸ்<br>நா.சதிஸ்வரன்<br>சி.சிவரூபன் | 1 |
| 2. | தமிழ் இலக்கண வினாவிடை | 4 | ஸ்ரீ.சுபாங்கன் | 1 |